**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**MCOP 62/2024**

**2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11 ஆம் நாள் புதன்கிழமை**

ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு. எஸ். முத்துராமன்,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**PW-1**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சோமசுந்தரம் | த /பெ. | நடராஜன் |
| கிராமம்: | மகாதேவபட்டினம் | தாலுக்கா: | மன்னார்குடி |
| மதம்: | இந்து | தொழில்: | |
| வயது: | 41 | முகவரி: | மன்னார்குடி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 11**.02.2026.**

**கூடுதல் முதல் விசாரணை** :-

நான் மனுவின் மனுதாரர் ஆவேன். ஏற்கனவே இந்த நீதிமன்றத்தில் முதல் விசாரணையும் குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டேன். அதன்பின்பு என் தரப்பில் அசல் மனுவில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை தவிர கூடுதலாக ஆவணங்களை தாக்கல் செய்ய இடைகால மனு எண்கள் தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு அனுமதிக்கப்பட்டது அதன் பின்பு என்னை அழைத்து இன்று வாய்த போடப்பட்டிருந்தது. ஏற்கனவே என் தரப்பில் ம.சா.ஆ. 1 முதல் 11 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. வங்கி கணக்கிணை என் சம்பளத்திலிருந்து ரூ. 13,045 /- பிடித்தம் செய்துள்ளார்கள் அதைக்காட்டுவதற்கான என் வங்கி கணக்கை தாக்கல் செய்தேன் அது ம.சா.ஆ. 12 ஆகும்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -**

விபத்தானது 10.01.2024 ல் ஏற்பட்டது. நான் 29.01.2024 மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டேன். நான் கடன் வாங்கியதாக சொல்லும் தேதி 30.04.2024 ஆகும். இந்த மனுவிற்காக ஆவணத்தை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு வலது காலில் எலும்பு முறிவு அதற்காக தான் 10.01.2024 முதல் 29.01.2024 வரை காமாட்சி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தேன். அதன்பின்பு 11.03.2024, 15.04.2024 ஆகிய தேதிகளில் மருத்துவமனையில் விடுவிப்பு செய்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் அவை ம.சா.ஆ. 4, 5 ஆகும். ம.சா.ஆ. 4, 5 ஆனது எனது காலில் ஏற்பட்ட காயத்திற்கான சிகிச்சை எடுத்த ஆவணம் இல்லை என்றாலும் வயிறு மற்றும் கணையத்தில் ஏற்பட்ட பித்தப்பை கல்லை நீக்குவதற்கு தான்

மருத்துவமனையில் சேர்ந்தேன் என்றாலும் சாட்சி விபத்து ஏற்பட்ட பின்பு Over doss மருந்துகள் கொடுக்கப்பட்டதால் வயிற்றில் பித்தப்பையில் கல் ஏற்பட்டது என்று கூறுகிறார். மேற்படி overdoss மருந்துகளால் தான் பித்தப்பையில் கல் ஏற்பட்டது என்று மருத்துவர் கூறினார் ஆனால் அதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. ம.சா.ஆ. 4, 5 மற்றும் ஆவணத்திற்கும் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 29.01.2024 ல் காலின் எலும்பு சம்பந்தமான பிரச்சனைக்கு எடுத்த மருத்துவ செலவுகளை காப்பீட்டு நிறுவனம் கொடுக்க கடமைப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. மருத்து காப்பீடு நான் எதுவும் பெறவில்லை. 29.01.2024 ல் காமாட்சி மருத்துவமனையில் சிகிச்சையில் மருத்து பில்லில் தமிழ்நாடு மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் ரூ. 2,92,527/- பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் இரண்டாவது முறை சிகிச்சை எடுத்து பின்பு New Health Insurance மூலமாக ரூ. 56,160/- பெற்றுள்ளேன் என்றால் சரிதான். 3 வது முறையாக எடுத்த சிகிச்சையில் ரூ. 1,28,740/- நான் பெற்றுக்கொள்ள சான்று வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி அந்த தொகையை பெறவில்லை என்று கூறுகிறார். நான் அந்த தொகையை பெற்றுவிட்டேன் என்று பொய்யாக தெரிவிக்கிறேன் என்றால் சரியல்ல. பெறும்பாலான மருத்துவ பில்களில் உள்ள Advance தொகையை செலவில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,

சார்பு நீதிபதி

மன்னார்குடி.